**06.02.2024 அ.வ.எண்.165/2008 பி.வா.சா.2, கண்ணன் த/பெ. பொன்னுசாமி**

**குறுக்கு விசாரணை**

இறந்த 1-ம் வாதியின் வீட்டை நான் எரித்துவிட்டதாக எனக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டு வழக்கு நடந்தது என்பது சரிதான். அந்த வழக்கு எனக்கு எதிராக மட்டும் தாக்கல் செய்யப்பட்டது. அவ்வாறு வீடு எரிந்ததற்கு அரசால் இழப்பீடு 1-ம் வாதி வழங்கப்பட்டது என்றால் அது சரியல்ல. வீடு எரிந்த சம்பவம் 2008-ல் நிகழ்ந்தது. இந்த வழக்கிற்கு பிறகுதான் அது நிகழ்ந்தது என்றால் அது சரியல்ல. புல எண்.214/6ஏ சம்மந்தமாக சாய்கிருஷ்ணன் ஒரு வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றும் அவர் இறந்த பிறகு அவரது தங்கை பாலசரஸ்வதி அந்த வழக்கை தொடர்ந்து நடத்தினார் என்றும் அந்த வழக்கில் சாய்கிருஷ்ணன் மேற்படி சொத்து தனக்கே சொந்தம் என்றும் அதனை யாருக்கும் விற்கவில்லை என்றும் சொல்லியுள்ளார் என்றால் அது சரியல்ல. சாய்கிருஷ்ணன் யாருக்கும் விற்கவில்லை என்று சொல்லியிருந்தால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி சொத்தில் சாய்கிருஷ்ணனுக்கு முழு உரிமை இல்லை என்றும் அதனால் அவர் 1-ம் வாதிக்கு அடமான ஆவணமும் கிரய உடன்படிக்கையும் எழுதி கொடுத்தார் என்றால் அப்படி ஏதும் அவர் எழுதிக் கொடுக்கவில்லை. ஆனால் 1972-ல் சாய்கிருஷ்ணனும் அவரது தந்தையும் சேர்ந்து ரூ.200/-க்கு வாய்மொழி போகியம் 1-ம் வாதியிடம் செய்திருந்தனர். மேற்படி போகியம் பதிவு செய்யப்பட்டது என்றும் அது விவரம் வில்லங்கத்தில் வருகிறது என்றும் அதனை தெரிந்துக்கொண்டுதான் என் மனைவி பெயரில் கிரயம் பெற்றுள்ளோம் என்றும் சொன்னால் அது சரியல்ல. அதன் பின்னிட்டும் 1-ம் வாதி சாய்கிருஷ்ணனுக்கு உடன்படிக்கையின் பெயரில் பல முறை தொகை கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1-ம் வாதி சாய்கிருஷ்ணனிடம் 1996-ல் வடக்கு தெற்கு 90 அடி, கிழக்கு மேற்கு 15 அடிக்கு ஒரு உடன்படிக்கை செய்திருந்தார். 1997-ல் சாய்கிருஷ்ணன் தாக்கல் செய்த வழக்கில் கூட்டுறவு சங்கத்திற்கு கொடுக்கப்பட்ட தானத்தை ஆட்சேபித்தும் அவரது குடும்ப சொத்துகள் பாக பிரிவினை ஆகவில்லை என்று தெரிவித்தும் வழக்காடினார் என்பது சரிதான். நாங்கள் கிரயம் பெறும் முன்னர் பாக பிரிவினை ஆகிவிட்டது அதனால் வாங்கினோம். அந்த பாக பிரிவினைக்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என கேட்டால் தாக்கல் செய்துள்ளேன். அந்த பாக பரிவினை எந்த ஆண்டு ஏற்பட்டது என்பது எனக்கு தெரியாது. பாக பரிவினையில் சாய்கிருஷ்ணனுக்கு கிடைத்த சொத்தில்தான் நாங்கள் கிரயம் பெற்றதாக கிரயப்பத்திரத்தில் குறிபிடப்பட்டுள்ளதா என கேட்டால் ஆமாம் குறிபிடப்பட்டுள்ளது. பாலசரஸ்வதி அவரது வழக்கில் சாட்சி சொல்ல என்னை அழைத்தாரா என கேட்டால் இல்லை. சாய்கிருஷ்ணன் தாக்கல் செய்த வழக்கின் சொத்து புல எண் எனக்கு தெரியாது. 1-ம் வாதியை ஏமாற்றும் நோக்கில் நானும் சாய்கிருஷ்ணனும் சேர்ந்து மோசடியாக ஆவணங்களை உருவாக்கினோம் என்பது சரியல்ல. 1-ம் வாதிக்கு சொந்தமான சொத்தில் 5 செண்ட் ஆக்கிரமித்து வீடு கட்டி உள்ளேன் என்றும் மீத இடம் வாதிகளின் அனுபவத்தில் உள்ளது என சொன்னால் அது சரியல்ல.